# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.35/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 05 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மணி | மதம் | : இந்து |
| த/பெ | : பொன்னுசாமி | ஜாதி | : -- |
| வயது | : 57 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : பொறியாளர் இந்திய விமானப்படை | வட்டம் | : திருத்தணி |

**05.01.2026**

**<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பப்பட்டு 7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் கமலம்மாள், செல்வகுமார், கிருபாகரண், டேவிட் என்ற பொற்கலன், குட்டி என்ற ஆனந்த் ராஜ் மற்றும் செல்வி மீது தாக்கல் செய்துள்ளேன். நான் மேலே சொன்ன கமலம்மாள், செல்வகுமார், கிருபாகரண், டேவிட் என்ற பொற்கலன், குட்டி என்ற ஆனந்த் ராஜ் மற்றும் செல்வி ஆகியோர் மீது மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் வேறு யார் மீதும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தின் புல எண்கள் சொல்ல முடியுமா என்றால் புல எண்.306/7 விஸ்தீரணம் 4 ஏக்கர் 12.5 செண்ட் ஆகும். நான் இந்த ஒரு புல எண் மீது மட்டும்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வேறு புல எண் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்.306/7 ல் உள்ள 4 ஏக்கர் 12.5 செண்ட்டும் எனக்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை.

2. புல எண்.306/7 ல் உள்ள 4 ஏக்கர் 12.5 செண்ட்டும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை எனும் பட்சத்தில் யாருடைய சொத்து என்றால் அரசாங்கத்தின் சொத்தாகும். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அம்மாவும் தம்பிகளும் அந்த இடத்தை விடமாட்டேன் என பிரச்சனை செய்கிறார்கள். அவர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை என்னுடைய இடம்

விட்டுவிடுங்கள் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புல எண்.306/7க்கும் இந்த வழக்கில் உள்ள புல எண்ணிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் எனக்கு வந்த பி நோட்டீஸில் உள்ள புல எண்ணைதான் சொல்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1ஐதான் சொல்கிறேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ 1 எந்த ஆண்டு கொடுத்தார்கள் என்றால் தேதி சரியாக ஞாபகமில்லை. 1994 ஆக இருக்கலாம். எனக்கு தேதி சரியாக ஞாபகமில்லை.

3. வா.சா.ஆ 1ல் நான் சொல்லும் புல எண் இல்லை என்றாலும் வா.சா.ஆ 1 வேறு புல எண்ணிற்காக அனுப்பப்பட்டது என்றாலும் சரிதான். புல எண்.307/6தான் எனக்கு கொடுத்த இடமாகும். அரசாங்கம் எனக்கு இடம் கொடுத்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இதுவரை அரசாங்கம் எனக்கு எந்த இடமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 01.04.2013ல் தான் வா.சா.ஆ 1 அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் 1994ல் அனுப்பப்பட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)